## யூலை – 08 – திங்கள்

**இரவின் திகிலுக்கும் பகலில் பாய்ந்துவரும் அம்புக்கும் நீர் அஞ்சமாட்டீர். திபா. 91:5**

---

**முதல் வாசகம் : தொடக்க நூல் 28 : 10 – 22**

அந்நாட்களில் யாக்கோபு பெயேர்செபாவிலிருந்து புறப்பட்டு, கரானை நோக்கிச் சென்றான். அவன் ஓரிடத்திற்கு வந்தபோது கதிரவன் மறைந்துவிட்டான். எனவே அங்கே இரவைக் கழிப்பதற்காக அவ்விடத்தில் கிடந்த கற்களில் ஒன்றை எடுத்துத்தலைக்கு வைத்துக்கொண்டு, அங்கேயே படுத்துறங்கினான். அப்போது அவன் கண்ட கனவு இதுவே. நிலத்தில் ஊன்றியிருந்த ஓர் ஏணியின் நுனி மேலே வானத்தைத் தொட்டுக்கொண்டு இருந்தது. அதில் கடவுளின் தூதர் ஏறுவதும், இறங்குவதுமாய் இருந்தனர். ஆண்டவர் அதற்கு மேல் நின்றுகொண்டு, "உன் மூதாதையராகிய ஆபிரகாம், ஈசாக்கின் கடவுளாகிய ஆண்டவர் நானே. நீ படுத்திருக்கும் இந்தநிலத்தை உனக்கும் உன்வழிமரபிற்கும் தந்தருள்வேன். உன் வழிமரபோ நிலத்தின் மணலுக்கு ஒப்பாகும். நீ மேற்கு, கிழக்கு, வடக்கு, தெற்குத் திசைகளில் பரவிச்செல்வாய். உன்னிலும் உன் வழிமரபிலும் மண்ணுலகின் எல்லா இனங்களும் ஆசிபெறுவன. நான் உன்னோடு இருப்பேன். நீ எங்குசென்றாலும் உனக்கு நான் காவலாயிருந்து இந்நாட்டிற்கு உன்னைத் திரும்பிவரச்செய்வேன். ஏனெனில், நான் உனக்கு வாக்களித்ததை நிறைவேற்றுமளவும் உன்னைக் கைவிடமாட்டேன்" என்றார். யாக்கோபு தூக்கம் தெளிந்து, "உண்மையாகவே ஆண்டவர் இவ்விடத்தில் இருக்கிறார் நானோ இதை அறியாதிருந்தேன்" என்று அச்சமடைந்து, "இந்த இடம் எவ்வளவு அச்சத்திற்குரியது! இதுவே இறைவனின் இல்லம், விண்ணுலகின் வாயில்" என்றார். பிறகு யாக்கோபு அதிகாலையில் எழுந்து, தலைக்கு வைத்திருந்த கல்லை எடுத்து, நினைவுத் தூணாக அதைநாட்டி, அதன்மேல் எண்ணெய் வார்த்து, "லூசு" என்று வழங்கிய அந்த நகருக்குப் "பெத்தேல்" என்று பெயரிட்டார். மேலும் அவர் நேர்ந்துகொண்டது. "கடவுள் என்னோடிருந்து நான் போகிற இந்தவழியில் எனக்குப் பாதுகாப்பளித்து உண்ண உணவும், உடுக்க உடையும் தந்து, என்தந்தையின் வீட்டிற்கு நான்நலமுடன் திரும்பச்செய்வாராயின், ஆண்டவரே எனக்குக் கடவுளாக இருப்பார். மேலும், நான் நினைவுத்தூணாக நாட்டிய இந்தக் கல்லே கடவுளின் இல்லம் ஆகும். மேலும், நீர் எனக்குத் தரும் யாவற்றிலும் பத்தில் ஒரு பங்கு உமக்குச் செலுத்துவேன்." என்றார்.

**பதில் பாடல் :** என் இறைவா நான் நம்பியிருக்கும் இறைவன் நீரே.

**நற்செய்தி : மத்தேயு 9 : 18 - 26**

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களிடம் பேசிக்கொண்டிருந்த பொழுது, தொழுகைக் கூடத்தலைவர் ஒருவர் அவரிடம் வந்து பணிந்து, "என் மகள் இப்பொழுதுதான் இறந்தாள். ஆயினும் நீர் வந்து அவள் மீது உம் கையை வையும். அவள் உடனே உயிர் பெறுவாள்" என்றார். இயேசு எழுந்து அவர் பின்னே சென்றார். இயேசுவின் சீடர்களும் அவரைப் பின்தொடர்ந்தனர். அப்பொழுது பன்னிரு ஆண்டுகளாய் இரத்தப்போக்கினால் வருந்திய ஒரு பெண் அவருக்குப்பின்னால் வந்து அவரது மேலுடையின் ஓரத்தைத் தொட்டார். ஏனெனில் அப்பெண், "நான் அவருடைய ஆடையைத் தொட்டாலே போதும், நலம்பெறுவேன்" எனத் தமக்குள் சொல்லிக் கொண்டார். இயேசு அவரைத் திரும்பிப் பார்த்து, "மகளே, துணிவோடிரு உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று" என்றார். அந்நேரத்திலிருந்தே அப்பெண் நலம் அடைந்திருந்தார். இயேசு அத்தலைவருடைய வீட்டிற்குச் சென்றார். அங்கே குழல் ஊதுவோரையும் கூட்டத்தினரின் அமளியையும் கண்டார். அவர், "விலகிப் போங்கள் சிறுமி இறக்கவில்லை, உறங்குகிறாள்" என்றார். அவர்களோ அவரைப் பார்த்து நகைத்தார்கள். அக்கூட்டத்தினரை வெளியேற்றிய பின் அவர் உள்ளே சென்று சிறுமியின் கையைப் பிடித்தார் அவளும் உயிர்பெற்று எழுந்தாள். இச்செய்தி அந்நாடெங்கும் பரவியது.'

**தியானம்:** "பெற்ற தாயுன்னை மறந்தாலும் நான் என்றும் உன்னை மறவேன்" என்று கூறிய இறைமகன் இயேசு எமக்கு என்ன நேர்ந்தாலும் எவ்வாறான சோதனைக்குரிய சம்பவங்கள் வந்தாலும், அவற்றை யாரிடம் கூறி ஆறுதல் அடைவோம் என்று தெரியாது சோர்ந்து போய் விடுகின்றோம். சில வேளைகளில் மன நோய்களினால் கஸ்டப்படுகின்றோம். ஆனால் நான் அரனும் கோட்டையும் பாதுகாவலுமாயிருந்து உன்னை என்றும் காத்துக்கொள்வேன். மனிதரிடம் ஆறுதல் பெறமுடியும், நீ என்னிடம் வா உனக்கு நிரந்தரமான விடுதலை தருவேன். நம்பிக்கையோடு இரு என்று ஆறுதலளிக்கிறார். இரத்தப் போக்குடைய நோயினால் 12 ஆண்டு காலமாக கஸ்டப்பட்ட பெண் பல வைத்தியரிடம் பணத்தைக் கொடுத்து விடுதலை பெற முடியாது வேதனைப்பட்டாள். இயேசுவின் வல்ல செயல்களை அறிந்தவளாய் அவரால் விடுதலை அடைய முடியும் என்று நம்பியவளாய் அவரது மேலாடையை தொட்டால் நான் விடுதலை அடைவேன் என்று நம்பியவளாய் மக்கள் கூட்டமாய் இருந்தாலும் அவர்கள் மத்தியிலும் இயேசுவின் ஆடையை தொட்டாள். அவரது வல்லமை வெளிப்பட்டு அந்நோயிலிருந்து விடுதலை அடைந்தாள். "மகளே துணிவோடிரு உன் நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று" ( மத்.9:22). இன்று நாங்களும் எமக்கு கஸ்டங்களோ, வேதனைகளோ, துன்பங்களோ எதுவாயிருந்தாலும் இறைவனிடம் அதற்காக மன்றாடாமல் மற்றவர்களிடம் கூறி ஆறுதல் பெறுவதற்கு பதிலாக அதனால் பிரச்சனைகளை உருவாக்கிக்கொள்கிறோம். எனவே எதுவாக இருந்தாலும் இயேசுவால் விடுதலை தர முடியும் என்று விசுவசித்து நம்பிக்கையுடன் வாழ்ந்தோமேயானால் எமது வாழ்வு சந்தோஸமானதாகவும், நிரந்தரமான நிலையான வாழ்வாகவும் அமையும். எனவே அவ்வாறான வாழ்வு ஒவ்வொரு குடும்பத்தில் இருக்க வேண்டி மன்றாடுவோம்.